கந்தர் அந்தாதி

மூலமும் பதப்பிரிவும்

காப்பு

வாரணத் தானை யயனைவிண் ணோரை மலர்க்கரத்து
வாரணத் தானை மகத்துவென் றோன்மைந் தனைதுவச
வாரணத் தானைத் துணைநயந் தானை வயலருணை
வாரணத் தானைத் திறைகொண்ட யானையை வாழ்த்துவனே.

வாரணத்தானை, அயனை, விண்ணோரை, மலர்க்கரத்து
வாரணத்தானை, மகத்து வென்றோன் மைந்தனை, துவச
வாரணத்தானை ,துணை நயந்தானை, வயல் அருணை
வாரணத்தானை, திறை கொண்ட யானையை வாழ்த்துவனே.

உண்ணா முலையுமை மைந்தா சரணம் பரருயிர்சேர்
உண்ணா முலையுமை மைந்தா சரண மருணைவெற்பாள்
உண்ணா முலையுமை மைந்தா சரணந் தனமுமொப்பில்
உண்ணா முலையுமை மைந்தா சரணஞ் சரணுனக்கே.

உண் ஆ முலை உ, மை மைந்து ஆசு அரண் அம்பரர் உயிர் சேர்
உள் நாம் ஐ, மை தா சர் அண் நம் அருணை வெற்பாள்
உண் ஆம் முலையும் ஐ மை தா சர நந்தனமும் ஒப்பில்
உண்ணாமுலை உமை மைந்தா! சரணம் சரண் உனக்கே.

நூல்

திருவாவி னன்குடி பங்காள ரெண்முது சீருரைச
திருவாவி னன்குடி வானார் பரங்குன்று சீரலைவாய்
திருவாவி னன்குடி யேரகங் குன்றுதொ றாடல்சென்ற
திருவாவி னன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே

திரு ஆவி நன்குடி பங்காளர் எண் முது சீர் உரை
சதிர் உவாவினன் குடி வான் ஆர் பரங்குன்று, சீரலைவாய்,
திரு ஆவினன்குடி, ஏரகம், குன்றுதோறாடல் சென்று
அதிர் உவா இனன் குடிகொண்ட, தண்கார்வரை செப்புமினே. 1

செப்புங் கவசங் கரபா லகதெய்வ வாவியம்பு
செப்புங் கவசங் கரிமரு காவெனச் சின்னமுன்னே
செப்புங் கவசம் பெறுவார் கணுந்தெய்வ யானைதனச்
செப்புங் கவசம் புனைபுயன் பாதமென் சென்னியதே.

செ புங்கவ சங்கர பாலக! தெய்வ வாவி அம்பு
செ புங்கவ! சங்கு அரி மருகா! எனச், சின்னம் முன்னே
செப்பு உங்கு அவசம் பெறுவார் கணும், தெய்வயானைத்
தனச்செப்பும் கவசம் புனை புயன் பாதம், என் சென்னியதே. 2

சென்னிய மோகந் தவிராமு தோகண் டிகிரிவெண்ணெய்ச்
சென்னிய மோகம் படவூ தெனத்தொனி செய்தபஞ்ச
சென்னிய மோகந் தரம்புனத் தேன்புணர் தேவைத்தெய்வச்
சென்னிய மோகம் பணிபணி யேரகத் தேமொழிக்கே.

சென்னி அம் ஓகம் தவிரா அமுதோ கண்? திகிரி வெண்ணெய்ச்
சென்னிய மோகம்பட ஊதெனத் தொனி செய்த பஞ்ச
சென்னியமோ கந்தரம்? புனத் தேன் புணர் தேவைத், தெய்வச்
சென்னி அமோகம் பணி, பணி ஏரகத் தேமொழிக்கே. 3

தேமொழி யத்தம் பெறவோந் தனக்கன்று சேணுலகத்
தேமொழி யத்தம் சினங்காட் டவுணரைச் சேமகரத்
தேமொழி யத்தம் புயமவர் சூடிகை சிந்தவென்ற
தேமொழி யத்தம் பதினா லுலகுமந் தித்ததொன்றே.

தேமொழி அத்தம் பெற, ஓம் தனக்கு அன்று சேணுலகத்
தேம் ஒழியத் தம் சினங் காட்டு அவுணரை, சே மகரத்
தேம், மொழி அத்தம், புயம், அவர் சூடிகை, சிந்த வென்ற
தே! மொழி அத்தம் பதினாலு உலகும் அந்தித்தது ஒன்றே. 4

தித்தவித் தார மனித்தரைத் தேவர் வணங்க முன்போ
தித்தவித் தாரகை மைந்தர்செந் தூர்க்கந்தர் சிந்துரவா
தித்தவித் தார முடையா ரருள்வெள்ளந் தேக்கியன்பு
தித்தவித் தாரந் தனிவீ டுறத்துக்கச் செவ்வனலே.

தித்த வித்தார மன் நித்தரைத், தேவர் வணங்க முன்
போதித்த, வி, தாரகை மைந்தர் செந்தூர்க் கந்தர், சிந்துர
ஆதித்த வி தாரமுடையார் அருள் வெள்ளம் தேக்கி அன்பு
உதித்து அவித்தார் அம் தனிவீடுற துக்கம் செ அனல் ஏ. 5

செவ்வந்தி நீலப் புயமுரு காபத்தர் சித்தமெய்யிற்
செவ்வந்தி நீலத்தை யுற்றருள் வாய்திங்கட் சேய்புனைந்த
செவ்வந்தி நீலத் தொருபாகர் போன்ற தினிச்சிந்தியார்
செவ்வந்தி நீலத்தி னீடுமுற் றாத திமிரமுமே

செவ்வந்தி நீலப் புயமுருகா! பத்தர் சித்தமெய்யிற்
செவ்வு அந்தி நீ லத்தை யுற்று அருள்வாய்!, திங்கள்சேய் புனைந்த
செவ்வந்தி நீலத் தொருபாகர் போன்றது இனிச் சிந்தியார்
செ வந்தி நீலத்தின் நீடும் முற்றாத திமிரமுமே. 6

திமிரத் திமிரக் கதரங்க கோபசெவ் வேலகைவேல்
திமிரத் திமிரக் ககுலாந் தகவரைத் தேன்பெருகுந்
திமிரத் திமிரத் தனையாவி யாளுமென் சேவகனே
திமிரத் திமிரக் கனலாய சந்தன சீதளமே.

திமிரத் திமி ரக்க தரங்கம் கோப! செவ்வேல! கைவேல்
திமிர திமி ரக்க குலாந்தக! வரைத்தேன் பெருகு
உந்திமிர் அத்திமிர் அத்தனை ஆவி ஆளும் என் சேவகனே!
திமிரத் திமிரக் கனலாய சந்தன சீதளமே 7

சீதனங் கோடு புயங்கைகொண் டார்தந் திருமருக
சீதனங் கோடு முடியாளர் சேய்தனக் கேதுளதோ
சீதனங் கோடு னிதருமென் பார்தொழுந் தேவிபெறு...
சீதனங் கோடு கொடிவேன் மயூரஞ் சிலையரசே.

சீ தனம் கோடு புயம் கை கொண்டார் தம் திருமருக!
சீதன் அம் கோடு முடியாளர் சேய் தனக்கு ஏது உளதோ?
சீ தனம் கோள் துனி தரும் என்பார் தொழும் தேவி பெறும்
சீதனம் கோடு கொடி வேல் மயூரம் சிலை அரசு ஏ. 8

சிலைமத னம்படு மாறெழுஞ் சேய்மயி லுச்சிட்டவெச்
சிலைமத னம்படு சிந்துவை யிந்துவைச் செய்வதென்யான்
சிலைமத னம்படு காட்டுவர் கேளிருஞ் செங்கழுநீர்ச்
சிலைமத னம்படு தாமரை வாவி திரள்சங்கமே.

சிலைமதன் அம்பு அடுமாறு எழும் சேய் மயில், உச்சிட்ட
எச்சிலை மதனம் படு சிந்துவை இந்துவை செய்வதென் யான்?
சிலை மதம் நம்படு காட்டுவர் கேளிரும், செங்கழுநீர்ச்
சிலை மது அனம் படு தாமரை வாவி திரள் சங்கமே 9

திரளக் கரக்கரை வென்கண்ட வேலன் றிசைமுகன்மால்
திரளக் கரக்கரை யான்பாட நாடுதல் செய்யசங்க
திரளக் கரக்கரை காண்பான்கைந் நீத்திசை வார்பனிக்க
திரளக் கரக்கரை வானீட்டு மைந்தர்புந் திக்கொக்குமே

திர ளக்க ரக்கரை வென் கண்ட வேலன், திசைமுகன் மால்
திரள் அக்கர், அக்கர், ஐ, யான் பாட நாடுதல் செய்ய சங்கு
அதிர் அளக்கர் அக்கரை காண்பான் கை நீத்திசைவார்
பனிக்கதிர் அள, கரக்கரை வான்நீட்டு மைந்தர் புந்திக்கு ஒக்குமே. 10

திக்கத்திக் கோடு படிபுடைச் சூதத் தெறிபடபத்
திக்கத்திக் கோடு கடடக் கடறடி சேப்படைச்சத்
திக்கத்திக் கோடு துறைத்திறத் தற்ற குறக்குறச்சத்
திக்கத்திக் கோடு பறித்துக்கொ டாதி சிறைப்பிறப்பே

திக்க திக்கோடு படி புடை சூதத் தெறி படபத்தி
கத்து இக்கோடு உகள, தடக் கடல் தடி சேப்படைச்சத்தி
கத்திக் கோடு துறைத்திறத்து அற்ற! குறக் குறசத்திக்கு
அத்திக்கோடு பறித்துக்கொடு ஆதி சிறைபிறப்பே. 11

சிறைவர வாமையி லேறிச் சிகரி தகரவந்து
சிறைவர வாமையில் கூப்பிடத் ,தானவர் சேனைகொண்ட
சிறைவர வாமையில் வாங்கிதன் றேங்கழல் யாங்கழலாச்
சிறைவர வாமையி னெஞ்சுட னேநின்று தேங்குவதே.

சிறை, வர, வாமயில் ஏறிச், சிகிரி தகர வந்து,
சிறை வர, ஆமை இல் கூப்பிடத், தானவர்சேனை கொண்ட
சிறைவர; ஆம் ஐயில் வாங்கி தன், தேங்கழல் யாம் கழலாச்
சிறு ஐவர் அவா மையில், நெஞ்சு உடனே நின்று தேங்குவதே. 12

தேங்கா வனமும் மதகரி வேந்துடன் சேர்ந்த விண்ணோர்
தேங்கா வனமுனை யவ்வேற் பணியெனுஞ் சேயிடமேல்
தேங்கா வனமுந் தளர்நடை யாயஞ்சல் செண்பகப்பூந்
தேங்கா வனமுங் கழுநீ ரிலஞ்சியுஞ் செந்திலுமே.

தேங்கு ஆவன மும்மதகரி வேந்துடன், சேர்ந்த விண்ணோர்
தேம் காவல் நம் முனைய வேல் பணி எனும் சேய் இடம், மேல்
தேங்கா அனமும் தளர் நடையாய் !அஞ்சல், செண்பக பூம்
தேங்கா வனமும் கழுநீர் இலஞ்சியும் செந்திலுமே. 13

செந்தி லகத்தலர் வாணுதல் வேடிச் சிமுகபங்க
செந்தி லகத்தலர் துண்டமென் னாநின்ற சேயசங்க
செந்தி லகத்தலர் ராசிதந் தானைச் சிறையிட்டவேற்
செந்தி லகத்தலர் தூற்றிடுங் கேடு திவாகருளே.

செம்திலகத்து அலர் வாள் நுதல் வேடிச்சி முக;பங்க செம்,
திலகத்து அலர் துண்டம் என்னா நின்ற சேய!, சங்க
செந்து இலக தலராசி தந்தானை, சிறையிட்ட வேல்
செந்தில்!, அகத்து அலர் தூற்றிடும் கேள், துதி வாகு அருளே,! 14

திவாகர கன்ன கொடைப்பாரி யென்றுழ றீனவல்லீர்
திவாகர கன்ன புரக்குழை வல்லி செருக்குரவந்
திவாகர கன்ன சுகவா சகதிறல் வேல்கொடென்புந்
திவாகர கன்ன மறலி யிடாதுயிர்ச் சேவலுக்கே.

திவா கரகன்ன! கொடைப்பாரி,! என்று உழல் தீன அல் ஈர்
திவாகர! கன்னபுரக்குழை வல்லி செருக்கு உர!
அந்தி வாகு அர கன்ன சுக வாசக,! திறல் வேல் கொடு என்
புந்தி வா! கர கன்ன மறலி இடாது உயிர்ச் சேவலுக்கே. 15

சேவற் கொடியும் பனிசாந் தகனுந் திருக்கரத்துச்
சேவற் கொடியுங் கொடியகண் டாய், தினை சூழ்புனத்துச்
சேவற் கொடியுந் திவளத் தவளுந்தந் திக்களபச்
சேவற் கொடியு முடையாய் பிரியினுஞ் சேரினுமே.

சேவற்கு ஒடியும்பல் நிசாந்தகனும், திருக்கரத்துச்
சேவற்கொடியும் கொடிய கண்டாய்; தினைசூழ்புனத்துச்
சேவல் கொடி உந்தி வளத்தவளும், தந்தி களபச்
சே வல் கொடியும் உடையாய்! பிரியினும் சேரினுமே 16

சேரிக் குவடு மொழிவிழி யாடனச் செவ்விகுறச்
சேரிக் குவடு விளைந்ததன் றேநன்று தெண்டிரைநீர்
சேரிக் குவடு கடைநாளி லுஞ்சிதை வற்றசெவ்வேள்
சேரிக் குவடு புடைசூழ் புனத்திற் றினைவிளைவே.

சேர் இக்கு வடு மொழி விழியாள் தனச்செவ்வி, குறச்
சேரிக்கு வடு விளைந்தது அன்றே நன்று. தெண்திரைநீர்
சேரி கு அடு கடைநாளிலும் சிதைவற்ற செவ்வேள்,
சேரி குவடு புடை சூழ் புனத்தில் தினை விளைவே. 17

தினைவேத் தியன்புசெய் வேந்தன் பதாம்புயத் திற்பத்திபுந்
தினைவேத் தியமுகந் தேற்றினர் மாற்றினர் பாற்றினந்தீத்
தினைவேத் தியர்நெறி செல்லாத விந்தியத் தித்தியினத்
தினைவேத் தியங்குயிர் கூற்றாரி லூசிடுஞ் சீயுடம்பே.

தினை ஏத்தி, அன்பு செய் வேந்தன் பதாம் புயத்தில்; பத்தி,
புந்தி, நைவேத்தியம் உகந்து ஏற்றினர்; மாற்றினர், பாற்றினம்
தீத் தின் ஐ வேத்தியர் நெறி செல்லாத இந்திய தித்தி யினத்தின்
நைவு ஏத்து இயங்கு உயிர் கூற்றுஆரில் ஊசிடும் சீ உடம்பே. 18

சீயனம் போதி யெனவாய் புதைத்துச் செவித்தரத்தோல்
சீயனம் போதி யமலையிற் றாதை சிறுமுநிவன்
சீயனம் போதி கடைந்தான் மருகன்செப் பத்திகைத்தார்
சீயனம் போதி லரனா திருக்கென் செயக்கற்றதே.

சீயன் நம் போதி என, வாய் புதைத்து, செவி தரத், தோல்,
சீய, நம்பு ஓதிய மலையின் தாதை சிறு முனிவன்
சீயன் அம்போதி கடைந்தான் மருகன், செப்பத், திகைத்தார்.
சீ அனம் போதில் அரன், ஆதி ருக்கு, என் செயக் கற்றதே 19

செயதுங்க பத்திரி போற்றும் பகீர திகரசெவ்வேற்
செயதுங்க பத்திரி சூடுங் குறத்தி திறத்ததண்ட...
செயதுங்க பத்திரி புத்திரி பாதத்தர் செல்வதென்பாற்
செயதுங்க பத்திரி யத்திரி யாதிரென் சிந்தையிலே.

செய துங்கபத்திரி போற்றும் பகீரதி கர! செவ்வேல்
செய! துங்க பத்திரி சூடும் குறத்தி திறத்த! தண்டம்
செய துங்க பத்தி ரிபுத் திரி பாதத்தர் செல்வ! தென்பால்
செய் அதுங்கு அபத்து இரியத் திரியாது இரு, என் சிந்தையிலே. 20

சிந்தா குலவ ரிசைப்பேரு மூருநஞ் சீருமென்றோர்
சிந்தா குலவ ரிடத்தணு காதரு டீமதலை
சிந்தா குலவரி மாயூர வீர செகமளப்பச்
சிந்தா குலவரி மருக சூரனைச் செற்றவனே.

சிந்தா குலவரிசைப் பேரும் ஊரும் நம்சீரும் என்று ஓர்
சிந்தா குலவரிடத்து அணுகாதருள், தீ மதலை
சிந்தா !குலவு அரி மாயூர வீர! செகம் அளப்ப
சிந்தாகு உலவு அரி மருக! சூரனைச் செற்றவனே. 21

செற்றை வரும்பழ னஞ்சோலை யிஞ்சி திகழ்வரைமேற்
செற்றை வரும்பழ நிக்கந்த தேற்றிடு நூற்றுவரைச்
செற்றை வரும்பழ நாடாள நாடிகண் சேய்விடுத்த
செற்றை வரும்பழ மாங்கூடு வேமத் தினத்தில்வந்தே.

செற்றை வரும் பழனம் சோலை, இஞ்சி திகழ் வரை மேல்
செல் தை வரும் பழநிக் கந்த! தேற்றிடு, நூற்றுவரை
செற்று, ஐவரும் பழநாடு ஆள நாடி, கண் சேய் விடுத்த
செற்றை வரும் பழமாம் கூடு வேம் அத்தினத்தில் வந்தே 22

தினகர ரக்கர தங்கெடுத் தார்குரு தேசிகர்செந்
தினகர ரக்கர மாறுடை யார்தெய்வ வாரணத்தந்
தினகர ரக்கர சத்தியின் றாகிலத் தேவர்நண்ப
தினகர ரக்கர தந்தீர்வ ரீர்வர் செகமெங்குமே.

தினகரர் அக்க ரதம் கெடுத்தார், குரு தேசிகர்,
செந்தி நகரர், அக்கரம் ஆறுடையார், தெய்வ ஆரண
தந்தி நகரர், அர கர சத்தி இன்றாகில் அத் தேவர்
நண்பதி ந கர ரக்கர் அதம் தீர்வர் ஈர்வர் செகமெங்குமே. 23

செகம்புர வார்கிளை யெல்லா மருண்டு திரண்டுகொண்ட
செகம்புர வாதிங்ஙன் செய்வதென் னோமயல் செய்யவன்பு
செகம்புர வாச மெனத்துயில் வார்செப்ப பங்கபங்க
செகம்புர வாமுரல் செந்தூர வென்னத் தெளிதருமே.

செகம் புர(ம்) வார் கிளை எல்லாம் மருண்டு திரண்டு கொண்டு
அசெ கம் புரவாது இங்ஙன் செய்வதென்னோ? மயல் செய்ய, வன்
புசெகம் புரவாசமென துயில்வார் செப்பு அபங்க
பங்கசெ கம்பு உரவா முரல் செந்தூர! என்னத் தெளிதருமே 24

தெளிதரு முத்தமிழ் வேதத்திற் றெய்வப் பலகையின்கீழ்
தெளிதரு முத்தமிழா நித்தர் சேவித்து நின்றதென்னாள்
தெளிதரு முத்தமிழ் தேய்நகை வாசகச் செல்விதினைத்
தெளிதரு முத்தமிழ் செவ்வே ளிருப்பச் செவிகுனித்தே.

தெளிதரு முத்தமிழ் வேதத்தில் தெய்வப் பலகையின் கீழ்
தெளி தரு முத்து அமிழாநித்தர் சேவித்து நின்றதென்? நாள்
தெளி தரு முத்து அமிழ்து ஏய் நகை வாசகசெல்வி, தினை
தெளி தரு முத்து அமிழ் செவ்வேள் இருப்பச் செவி குனித்தே. 25

செவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு
செவிக்குன்ற வாரண மஞ்சலென் றாண்டது நீண்டகன்மச்
செவிக்குன்ற வாரண வேலா யுதஞ்செற்ற துற்றனகட்
செவிக்குன்ற வாரண வள்ளிபொற் றாண்மற்றென் றேடுவதே.

செவிக்கு உன் தவா ரண நல்கு இசை பூட்ட, வன் சிந்தை
அம்புசெ வி குன்ற வாரணம் அஞ்சல் என்று ஆண்டது, நீண்ட கன்ம
செ இக்குன்று அவா ரண வேலாயுதம் செற்றது உற்றன
கட்செவிக்குன்ற!, வாரண, வள்ளி பொற்றாள் மற்று என் தேடுவதே? 26

தேடிக் கொடும்படை கைக்கூற் றடாதுளஞ் சேவின்மைமீன்
தேடிக் கொடும்படை கோமான் சிறைபட வேறுளபுத்
தேடிக் கொடும்படை யாவெகு நாட்டன் சிறைகளையுந்
தேடிக் கொடும்படை மின்கேள்வ னற்றுணை சிக்கெனவே.

தேடிக்கொள் தும்பு அடை கை கூற்று அடாது உளம் சே வில் மை மீன்
தேள் திக்கொடும் படை கோமான் சிறைபட வேறுள
புத்தேள் தி கொடும்பு அடையா வெகுநாட்டன் சிறைகளை
உந்துஏடு இக்கொடும் படு ஐ, மின் கேள்வன் நற்றுணை சிக்கெனவே 27

சிக்குறத் தத்தை வழங்கா திழந்து தியங்குவர்தே
சிக்குறத் தத்தை வடிவே லனார்சில ரன்பர்செந்தாள்
சிக்குறத் தத்தை கடிந்தேனல் காக்குஞ் சிறுமிகுறிஞ்
சிக்குறத் தத்தை யனகிலெப் போதுந் திகழ்புயனே.

சி குறு அத்தத்தை வழங்காது இழந்து தியங்குவர்,
தேசு இக்குற தத்து ஐ வடிவேல் எனார் சிலர், அன்பர் செந்தாள்
சிக்குற, தத்தை கடிந்து ஏனல் காக்கும் சிறுமி
குறிஞ்சிக் குறத்து அத்தையல் நகில், எப்போதும் திகழ்புயனே. 28

திகழு மலங்கற் கழல்பணி வார்சொற் படிசெய்யவோ
திகழு மலங்கற் பகவூர் செருத்தணி செப்பிவெண்பூ
திகழு மலங்கற் பருளுமென் னாவமண் சேனையுபா
திகழு மலங்கற் குரைத்தோ னலதில்லை தெய்வங்களே.

திகழும் அலங்கல் கழல் பணிவார் சொற்படி செய்ய
ஓதி கழுமலம் கற்பகவூர் செருத்தணி செப்பி வெண்
பூதி கழு மலம் கற்பு அருளும் என்னா அமண் சேனை
உபாதி கழு மலங்கற்கு உரைத்தோன், அலது இல்லை தெய்வங்களே. 29

தெய்வ மணம்புணர் தீகால் வெளிசெய்த தேவரைந்த
தெய்வ மணம்புண ராரிக்கு மருக செச்சையந்தார்
தெய்வ மணம்புண ருங்குழ லாளைத் தினைப்புனத்தே
தெய்வ மணம்புணர் கந்தனென் னீருங்க டீதறவே.

தெய்வ, மண், அம்பு, உணர், தீ, கால், வெளி செய்த தே வரைந்தது
எய்வ, மண் அம் புள் நராரிக்கு மருக!, செச்சை அம் தார்
தெய்வ, மணம் புணரும் குழலாளைத் தினைபுனத்தே
தெய்வ மணம் புணர் கந்தன்! என்னீர், உங்கள் தீது அறவே. 30

தீதா வசவ னுபவிக்க மண்ணிலும் விண்ணிலுஞ்செந்
தீதா வசவ னியாயஞ்செய் வேதிய ரேதியங்காத்
தீதா வசவ னிமலர்செல் வாசாக் கிரவசத்த
தீதா வசவன் புறப்பா ரெனுமுத்தி சித்திக்கவே.

தீதா வசவு அனுபவிக்க மண்ணிலும் விண்ணிலும்
செந்தீ தாவு அச அனியாயம் செய் வேதியரே, தியங்கா
தீ தா வசவ நிமலர் செல்வா!, சாக்கிர வசத்து
அதீதா வச அன்புறப்பாரெனும் முத்தி சித்திக்கவே. 31

சித்திக்கத் தத்துவ ருத்திர பாலக செச்சைகுறிஞ்
சித்திக்கத் தத்துவ ரத்தியின் மாவென்ற சேவகவிச்
சித்திக்கத் தத்துவர் வாய்மொழி மாதர்க் கெனுந்திணைவா
சித்திக்கத் தத்துவ ருத்தப் படாதுநற் சேதனமே.

சித்திக்க தத்துவ! ருத்திர பாலக,! செச்சை
குறிஞ்சித் திக்க!, தத்து உவர் அத்தியில் மா வென்ற சேவக!
இச்சித்து இக்கத்து அத்துவர் வாய் மொழி மாதர்க்கு எனும் திணை
வாசித்து இக்கத்தத்து வருத்தப்படாது நற்சேதனமே. 32

சேதனந் தந்துறை யென்றுமை செப்புங் குருந்துறைகாற்
சேதனந் தந்துறை யல்லிமன் வாவிச் செந்தூர்கருத
சேதனந் தந்துறை யென்றறி யார்திற நீங்கிநெஞ்சே
சேதனந் தந்துறை மற்றுமுற் றாடித் திரிகைவிட்டே.

சே தனம் தந்து உறு ஐ என்று உமை செப்பும் குருந்து, உறை
காற்சேது அனம் தந்து உறை அல்லி மன் வாவி செந்தூர் கருது,,
அசேதனம் தம் துறை என்று அறியார் திறம் நீங்கி, நெஞ்சே
சேது அனந்தம் துறை மற்றும் உற்று ஆடித் திரிகை விட்டே 33

திரிகையி லாயிர வெல்லாழி மண்விண் டருசிரபாத்
திரிகையி லாயிர வாநந்த நாடகி சேரிமகோத்
திரிகையி லாயிர மிக்குமைந் தாசெந்தி லாயொருகால்
திரிகையி லாயிரக் கோடிசுற் றோடுந் திருத்துளமே.

திரிகை இலாய், இரவு எல் ஆழி மண் விண் தரு சிர
பாத்திரி கையிலாயி ரவு ஆநந்த நாடகி சேர்
இமகோத்திரி கையில் ஆயி ரமிக்கும் மைந்தா, செந்திலாய், ஒருகால்
திரிகையில் ஆயிரம் கோடி சுற்று ஓடும் திருத்து உளமே. 34

திருத்துள வாரிகல் போதுடன் சேண்மழை தூங்குஞ்சங்க
திருத்துள வாரிதி கண்டுயி லாசெயன் மாண்டசிந்தை
திருத்துள வாரன்னை செந்தூரையன் னள்செம் மேனியென்பு
திருத்துள வார்சடை யீசர்மைந் தாவினிச் செச்சைநல்கே.

திருத்துளவார் இகல் போதுடன் சேண் மழை தூங்கும்
சங்கது இருத்துள வாரிதி கண்துயிலா செயல் மாண்ட சிந்தை
திருத்து உள ஆர்? அன்னை செந்தூரை அன்னள், செம் மேனி என்பு
உதிருத்துள வார் சடை ஈசர் மைந்தா இனி செச்சை நல்கே. 35

செச்சைய வாவி கலயில்வல்வாயிடைச் சேடனிற்கச்
செச்சைய வாவி பருகுஞ் சிகாவல செங்கைவெந்தீ
செச்சைய வாவி விடுகெனுஞ் செல்வநின் றாளணுகச்
செச்சைய வாவி னுயிர்வாழ் வினியலஞ் சீர்ப்பினுமே.

செச்சைய!, வாவு இகல் அயில் வல் வாயிடை சேடன் நிற்க
செ சைய ஆவி பருகும் சிகாவல!, செம் கை வெம் தீ
செச்சைய வாவி விடுக எனும் செல்வ!, நின் தாள் அணுக
செ, சை அவாவின் உயிர் வாழ்வு இனி அலம் சீர்ப்பினுமே. 36

சீர்க்கை வனப்பு மலர்வேங்கை யானவன் செஞ்சிலையோர்
சீர்க்கை வனப்பு னிதத்தவ வேடன் றினைவளைக்குஞ்
சீர்க்கை வனப்பு னமதுருக் காட்டிய சேய்தமிழ்நூற்
சீர்க்கை வனப்பு னிமிர்சடை யோன்மகன் சிற்றடிக்கே.

சீர்க்கை வனப்பு, மலர் வேங்கையானவன், செஞ்சிலையோர்
சீர் கை வன புனித தவ வேடன், தினை வளைக்கும்
சீர்க்கு ஐவன புனமது உருக்காட்டிய சேய்! தமிழ் நூல்
சீர்க்கு ஐ!, வன புல் நிமிர் சடையோன் மகன், சிற்றடிக்கே. 37

சிற்றம் பலத்தை யரன்புநெய் நூற்றிரி சிந்தையிடுஞ்
சிற்றம் பலத்தை வரஞான தீபமிட் டார்க் குப்பரி
சிற்றம் பலத்தை யருளுஞ்செந் தூரர் பகைக்குலமாஞ்
சிற்றம் பலத்தைப் பதவரந் தோளிலிந் தீவரமே.

சிற்றம்பலத்து ஐயர் அன்பு நெய் நூல் திரி சிந்தை இடும்
சில் தம்ப லத்தைவர ஞானதீபம் இட்டாருக்கு
பரிசில் தம்பலத்தை அருளும் செந்தூரர் பகைக்குலமாம்
சிற்று அம்பு அல, தைப்பது அவர் அம் தோளில் இந்தீவரமே. 38

தீவர கந்தரி தாம்பகி ராருற வானசெம்பொன்
தீவர கந்தரி யாநொந்த போதினிற் செச்சையவிந்
தீவர கந்தரி சிந்துரை பாக சிவகரண
தீவர கந்த ரிபுதீ ருனதடி சேமநட்பே.

தீ வரகு அந்து அரி தாம்பகிரார், உறவான செம்பொன்
தீவர். அகம் தரியா நொந்தபோதினில் செச்சைய!
இந்தீவர, கந்தரி சிந்துரை பாக!, சிவகரண
தீ வர கந்த! ரிபு தீர் உனது அடி சேம நட்பே. 39

சேமர விக்கம் படையாக வீசுப தேசமுன்னூற்
சேமர விக்கம் பலந்தரு வாய்செரு வாயவெஞ்சூர்ச்
சேமர விக்கம் திரித்தாய் வருத்திய வன்றிறென்றல்
சேமர விக்கம் புயவாளி விண்டிரை தெண்டிரையே.

சேம ரவிக்கு அம் படையாக வீசு உபதேசம் முன்னூல்
சேமர் அவிக்கு அம் பலம் தருவாய்! செருவாய வெம் சூர்
சே மரவிக்கம் திரித்தாய்! வருத்திய அன்றில் தென்றல்
சே, மர இக்கு அம்புயவாளி விண்டு இரை தெண்டிரையே. 40

தெண்டன் புரந்தர வக்குன்றில் வாழ்கந்த சிந்துவிலுத்
தெண்டன் புரந்தர லோகஞ் செறாதுசெற் றோய்,களைவாய்
தெண்டன் புரந்தர நற்கேள் சிறுவ ரழச்செய்தெம்மைத்
தெண்டன் புரந்தர வின்படி நூக்கிய தீநரகே.

தெண்டன் புரந்து அரவக்குன்றில் வாழ்கந்த ! சிந்துவில்
உத்தெண்டன் புரந்தரலோகம் செறாது செற்றோய்!, களைவாய்,
தெண்டன் புரந்தர் அம் நற்கேள் சிறுவர் அழச்செய்து எம்மை
தெள் தன் புரம் தரவின்படி நூக்கிய தீ நரகே. 41

தீனந் தினத்து தரச்செல்வர் பாற்சென் றெனக்கென்பதோர்
தீனந் தினத்து முதரா னலஞ்சுடச் சேர்ந்துசுடுந்
தீனந் தினத்து னிகளைசெங் கோட்டினன் செந்திலந்நீர்
தீனந் தினத்து தவத்துப் பிரசதஞ் செய்யவற்றே.

தீ நந்து இனத்து உதர செல்வர் பால் சென்று எனக்கு என்பது ஓர்
தீனம் தினத்தும் உதரானலம் சுட சேர்ந்து சுடும்
தீ நம் தினத்துனி களை செங்கோட்டினன் செந்தில் அம் நீர்
தீன் நந்தின் அத்து உதவத் துப்பு இரசதம் செய்ய வற்றே. 42

செய்யசெந் தாமரை யில்லாத மாதுடன் செந்தினைசூழ்
செய்யசெந் தாமரை மானார் சிலம்பிற் கலந்துறையுஞ்
செய்யசெந் தாமரை யென்னுங் குமார சிறுசதங்கைச்
செய்யசெந் தாமரை சேர்வதென் றோவினை சேய்தொலைத்தே.

செய்ய செம் தாமரை இல்லாது அ மாதுடன் செந்தினைசூழ்
செய் அசெம் ,தா மரை, மான், ஆர் சிலம்பில் கலந்துறையும்
செய்ய! செம் தாமர் ஐ என்னும் குமார! சிறு சதங்கை
செய்ய செந்தாமரை சேர்வது என்றோ? வினை சேய் தொலைத்தே. 43

சேதாம் பலதுறை வேறும் பணிகங்கை செல்வநந்தன்
சேதாம் பலதுறை யாதசிற் றாயன் றிருமருக
சேதாம் பலதுறை செவ்வாய்க் குறத்தி திறத்தமுத்திச்
சேதாம் பலதுறை யீதென் றெனக்குப தேசநல்கே.

சேது ஆம் பலதுறை வேறும் பணி கங்கை செல்வ!,நந்தன்
சே தாம்பலது உறையாத சிற்றாயன் திருமருக!
சேது ஆம்பலது உறை செவ்வாய் குறத்தி திறத்த! முத்தித்
சே தாம் பல துறை ஈதென்று எனக்கு உபதேச(ம்) நல்கே. 44

தேசம் புகல வயிலே யெனச்சிறை புக்கொருகந்
தேசம் புகல வணவாரி செற்றவ னீசற்குப
தேசம் புகல திகவாச கன்சிறி தோர்கிலன்மாந்
தேசம் புகல கமுதவி மானைச் செருச் செய்வதே.

தேசம் புகல அயிலே என சிறை புக்கு ஒருகம்
தே சம்பு, கல வண வாரி செற்றவன் ஈசர்க்கு
உபதேசம் புகல் அதிக வாசகன் சிறிது ஓர்கிலன்
மாந் தேசு அம்பு கலகம் உதவி மானைச் செருச் செய்வதே. 45

செருக்கும் பராக வயிராவ தத்தெய்வ யானைமணஞ்
செருக்கும் பராக தனந்தோய் கடம்ப செகமதநூல்
செருக்கும் பராக மநிரு பனந்தந் தெளிவியம்பு
செருக்கும் பராகம் விடுங்கடை நாளுந் திடம்பெறவே.

செருக் கும்ப ராக அயிராவதத் தெய்வயானை மணம்
செருக்கும் பராக தனம் தோய் கடம்ப! செக மதநூல்
செருக்கும் பர ஆகம நிருபன்! அந்தம் தெளிவி,
அம்புசெர் உக்கு உம்பர் ஆகம் விடும் கடை நாளும் திடம் பெறவே. 46

திடம்படு கத்துங் கெடீர்கன்ம லோகச் சிலுகுமச்சோ
திடம்படு கத்துந் திரித்தம்பு வாலி யுரத்தும்பத்துத்
திடம்படு கத்துந் தெறித்தான் மருக திருகுமும்ம
திடம்படு கத்துங் கநகங் குனித்தவன் சேயெனுமே.

திடம் படு உகத்தும் கெடீர் கன்ம லோக சிலுகும்
அச்சோதிடம் படுகத்தும் திரித்து அம்பு வாலி உரத்தும் பத்துத்
திடம்படு கத்தும் தெறித்தான் மருக! திருகு மும்மதிள்
தம்படு உகத் துங்க நகம் குனித்தவன் சேய் எனுமே. 47

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்தசெந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே.

சேய அன்பு உந்தி வன வாச மாதுடன் சேர்ந்த செந்தில்
சேய! வம்பு உந்து இகல் நிசாசராந்தகா! சேந்த! என்னில்
சேயவன், புந்தி, பனிப்பானு, வெள்ளி, பொன், செங்கதிரோன்
சேய், அவன் புந்தி தடுமாறவே தரும் சேதம் இன்றே. 48

சேதக மொன்று மனாதியுந் தாதையுந் தேடரியார்
சேதக மொன்றுஞ் சதங்கையங் கிண்கிணி செச்சையந்தாள்
சேதக மொன்றும் வகைபணி யாயினித் தீயவினைச்
சேதக மொன்று மறியா துழலுயிர்ச் சித்திரமே.

சேத கம் ஒன்று மன் ஆதியும், தாதையும், தேட அரியார்
சே தகமொன்றும் சதங்கை அம் கிண்கிணி செச்சை அம் தாள்
சேது அகம் ஒன்றும் வகை பணியாய், இனி தீய வினைச்
சேதகம் ஒன்றும் அறியாது உழல் உயிர் சித்திரமே. 49

சித்திர மிக்க னவில்வாழ் வெனத்தெளி யுந்தவவா
சித்திர மிக்க னெறிக்கழிந் தேற்கினிச் செச்சைநல்வி
சித்திர மிக்க தனக்குறத் தோகை திறத்தமுத்தி
சித்திர மிக்க வருளாய் பிறவிச் சிகையறவே.

சித்திரம் இக்கனவு இல்வாழ்வு எனத் தெளியும் தவவாசித்
திரம் இக்கன் நெறிக்கு அழிந்தேற்கு இனி, செச்சை நல்
விசித்திர ! மிக்க தனக் குறத் தோகை திறத்த !முத்தி
சித்தி ரமிக்க அருளாய் பிறவிச் சிகை அறவே. 50

சிகைத்தோகை மாமயில் வீரா சிலம்புஞ் சிலம்பம்புரா
சிகைத்தோகை மாமயில் வாங்கிப் பொருது திசைமுகன்வா
சிகைத்தோகை மாமயில் வானில்வைத் தோய்வெஞ் செருமகள்வா
சிகைத்தோகை மாமயில் செவ்விநற் கீரர்சொற் றித்தித்ததே

சிகைத் தோகை மா மயில் வீரா! சிலம்பும் சிலம்பு அம்புராசி
கைத் தோகை மா மய் இல் வாங்கி பொருது திசைமுகன்
வாசிக் கைத்து ஓகை மாமய் இல் வானில் வைத்தோய் வெஞ் செரு மகள்வாசி
கைத்தோ கைமா மயில் செவ்வி நற்கீரர் சொல் தித்தித்ததே. 51

தித்திக்குந் தொந்திக்கு நித்தம் புரியுஞ் சிவன் செவிபத்
தித்திக்குந் தொந்திக் கறமொழி பாலக தேனலைத்துத்
தித்திக்குந் தொந்திக் கிளையாய் விளையுயிர்க் குஞ்சிதைதோல்
தித்திக்குந் தொந்திப் பனவேது செய்வினைத் தீவிலங்கே.

தித்திக்கும் தொந்திக்கும் நித்தம் புரியும் சிவன் செவி
பத்தித்திக்கு உந்து ஓம் திக்கற மொழி பாலக!, தேன் அலைத்து,
தித்திக்கும் தொந்திக்கு இளையாய்! விளை உயிர்க்கும் சிதை தோல்
தித்திக்கும் தொந்திப்பன ஏது செய் வினைத் தீ விலங்கே?. 52

தீவிலங் கங்கை தரித்தார் குமார திமிர முந்நீர்
தீவிலங் கங்கை வருமான் மருக தெரிவற்றவான்
தீவிலங் கங்கை வரவா விரைக்குத் திரிந்துழலுந்
தீவிலங் கங்கை யமன்றொட ராமற் றிதம்பெறவே.

தீ விலம் கங்கை தரித்தார் குமார!, திமிர முந்நீர்
தீ வில் அங்கம் கை வரு மான் மருக! தெரிவற்ற வான்
தீவில் அங்கங்கு ஐவர் அவாவு இரைக்குத் திரிந்து உழலும்
தீ விலங்கம் கை யமன் தொடராமல் திதம் பெறவே. 53

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே.

திதத்தத் தத்தித்த திதி தாதை தாத துத்தி தத்தி தா
திதத் தத்து அத்தி ததி தித்தித்ததே துத் துதித்து இதத்து
ஆதி தத்தத்து அத்தி தத்தை தாத திதே துதை தாது அதத்து
உதி தத்து அத்து அத்தி தித்தி தீ தீ திதி துதி தீ தொத்ததே. 54

தீதோ மரணந் தவிரும் பிறப்பறுந் தீயகற்புந்
தீதோ மரணம் பரமீது தானவர் சேனை முற்றுந்
தீதோ மரணந் தனபூசு ரர்திரண் டேத்தியமுத்
தீதோ மரண மலையாளி யென்றுரை தென்னுறவே.

தீதோ மரணம் தவிரும் பிறப்பு அறும் தீய கல் புந்தீ
தோம் அரண் அம்பர மீது தானவர் சேனை முற்றும்
தீ தோமர ணந்தன! பூசுரர் திரண்டு ஏத்திய
முத்து ஈது ஓம ரண மலையாளி என்று உரை தென்னுறவே. 55

தென்ன வனங்கனஞ் சூழ்காத் திரிநக சூலகரத்
தென்ன வனங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
தென்ன வனங்கனன் னீற்றாற் றிருத்திய தென்னவின்னந்
தென்ன வனங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே.

தென்ன வனம் கனம் சூழ் காத் திரிநக சூலகரத்
தென்னவன் அங்க னந்த பத நீட்டினன் செல்வ! முன்பின்
தென்னவன் அங்க (ம்) நன்னீற்றால் திருத்திய தென்ன? இன்னம்
தென்ன அனங்கன் அம் கை சிலைக் கூனையும் தீர்த்து அருளே. 56

தீத்தன் பரவை வெளிநீங்கிச் சேய்தொழச் செல்பதவுத்
தீத்தன் பரவை முறையிட மாங்குறை தீங்கறவே
தீத்தன் பரவை தழைக்கவிண் காவெனச் சென்னியின்மேல்
தீத்தன் பரவையில் வேலத்த னேகுரு சீலத்தனே.

தீத்தன் பரவு ஐ வெளி நீங்கி சேய் தொழச் செல் பத
உத்தீத்தன் பரவை முறையிட மாங்குறை தீங்கு அறவே
தீத்து அன்பர் அவை தழைக்க விண் கா, எனச் சென்னியின் மேல்
தீத்தன் பரவு ஐயில் வேல் அத்தனே! குருசீலத்தனே. 57

சீலங் கனமுற்ற பங்கா கரசல தீரக்கநி
சீலங் கனமுற்ற முத்தூர்செந் தூர சிகண்டியஞ்சு
சீலங் கனமுற்ற வேதனை மேவித் தியங்கினஞ்சீ
சீலங் கனமுற்ற விப்பிறப் பூடினிச் சேர்ப்பதன்றே.

சீலம் கனம் முற்று அபங்கா! கரசலதீ ரக்க,
நிசீ லங்கன!, முற்றம் முத்து ஊர் செந்தூர! சிகண்டி அம்
சுசீ லங்கனம் உற்ற வேதனை மேவித் தியங்கினம்
சீசீ! லங்கனம் முற்ற இப்பிறப்பூடு இனி சேர்ப்பது அன்றே. 58

சேர்ப்பது மாலய நீலோற் பலகிரித் தெய்வவள்ளி
சேர்ப்பது மாலய முற்றா ரெனப்பலர் செப்பவெப்புச்
சேர்ப்பது மாலய வத்தைமன் யாக்கை சிதைவதன்முன்
சேர்ப்பது மாலய வாசவன் செப்பிய செப்பதத்தே.

சேர் பதும் ஆல் அய(ம்) நீலோற்பல கிரித் தெய்வ வள்ளி
சேர்ப்ப! துமால் லயமுற்றார் எனப் பலர் செப்ப, வெப்பு
சேர்ப்பது மால் ஐ அவத்தை மன் யாக்கை சிதைவதன் முன்
சேர்ப்பது, மால் அய வாசவன் செப்பிய செப் பதத்தே. 59

செப்பத் தமதிலை மாற்றார் கொளுமுன்னங் செல்வர்க்கிடச்
செப்பத் தமதிலை யெங்ஙனுய் வார்தெய்வ வேழமுகன்
செப்பத் தமதிலை வாணுத னோக்கினர் சேணில்வெள்ளிச்
செப்பத் தமதிலை வென்றார் குமாரவத் திக்கரசே.

செப்ப தமது இலை மாற்றார் கொளு முன்னம் செல்வர்க்கு இடச்
செப்பு அத்தமது இலை, எங்ஙன் உய்வார்? தெய்வ வேழமுகன்
செப்பு அத்தம! திலை வாள் நுதல் நோக்கினர், சேணில் வெள்ளிச்
செப்பு அத்த மதிலை வென்றார் குமார! அத்திக்கு அரசே.! 60

திக்கர சத்தி தவன்சென்று முன்றி திகுமரர்வந்
திக்கர சத்தி யிடத்தோயென் செய்வ தெனத்தருநீ
திக்கர சத்தி விதிர்த்திலை யேலெவன் செய்குவரத்
திக்கர சத்தி யலைவாய் வளர்நித் திலக்கொழுந்தே.

திக்கர் அசத் திதவன் சென்றுமுன், திதிகுமரர்
வந்திக்கு அர! சத்தி இடத்தோய், என்செய்வது? எனத், தரும்
நீதி கரசத்தி விதிர்த்திலையேல் எவன் செய்குவர்?
அத்திக்கு அரசு! அத்தி அலைவாய் வளர் நித்திலக் கொழுந்தே! 61

திலமுந் தயில முநிகர வெங்குந் திகழ்தருசெந்
திலமுந் தயில முருகா வெனாதத் திநகையினித்
திலமுந் தயிலமு தத்தா லுருகிய சித்தவென்னே
திலமுந் தயில கலவினை மேவித் தியங்குவதே.

திலமும் தயிலமும் நிகர எங்கும் திகழ்தரு
செந்தில! முந்து அயில! முருகா! எனாது, அத்தி நகை இன்
நித்திலம் உந்து அயில் அமுதத்தால் உருகிய சித்த! என்
ஏதிலம் முந்தயில் அகல, வினை மேவித் தியங்குவதே. 62

தியங்காப் பொறியுண் டெனுந்தனுத் தீதலு மேதியையூர்
தியங்காப் பொறியுண் டவமிலி யேயென்று செப்பலுஞ்சத்
தியங்காப் பொறியுண் டயன்கைப் படாது திரவெற்புநி
தியங்காப் பொறியுண்டை பண்டுயப் போர்செய்த சேவகனே.

தியங்காப் பொறியுண்டு எனும் தனுத் தீதலும், மேதியை
ஊர்தி அங்காப் பொறி உண் தவமிலியே என்று செப்பலும்,
சத்தியம் காப் பொறியுண்டு அயன் கைப்படாது திர வெற்பு
நிதியம் கா பொறியுண்டை ,பண்டு உயப் போர் செய்த சேவகனே. 63

சேவக மன்ன மலர்க்கோமுன் னீசொலத் தெய்வவள்ளி
சேவக மன்ன வதனாம் புயகிரி செற்றமுழுச்
சேவக மன்ன திருவாவி னன்குடிச் செல்வகல்விச்
சேவக மன்ன முநிக்கெங்ங னாணித் திகைப்புற்றதே.

சே அகம் மன்னும் அமலர்க்கு ஓம் முன் நீ சொலத், தெய்வ வள்ளி
சே அகம் அன்ன வதனாம் புய! கிரி செற்ற முழுச்
சேவக! மன்ன! திருஆவினன்குடிச் செல்வ! கல்விச்
சேவகம் அன்னம் முனிக்கு எங்ஙன் நாணித் திகைப்புற்றதே. 64

திகைப்படங் கப்புயந் தந்தரு ளானென் படிங்கணிய
திகைப்படங் கத்தமை யார்செந்தி லாரென்ப தென்னனுய
திகைப்படங் கப்புகல் சேயென்பள் கன்னிகண் ணீர்தரவி
திகைப்படங் கத்தமை யாதெமை யாட்கொளுஞ்சீகரமே.

திகைப்பள் தங்க புயம் தந்தருளான் என்பள் ,திங்கள்
நியதி கைப்பள் தம் கத்து அமையார் செந்திலார் என்பள், தென்னன்
உயதி கைப்பு அடங்கப் புகல் சேய் என்பள், கன்னி கண்ணீர் தர
விதி கைப்படு அங்கத்து அமையாது எம் ஐ! ஆட்கொளும் சீகரமே!. 65

சீகர சிந்துர வுத்தவெஞ் சூர செயபுயவ
சீகர சிந்துர வல்லிசிங் கார சிவசுதசு
சீகர சிந்துர கந்தர வாகன் சிறைவிடுஞ்சு
சீகர சிந்துர மால்வினைக் குன்றைச் சிகண்டிகொண்டே.

சீகரம் சிந்து ரவுத்த, வெஞ்சூர செய! புய
வசீகர, சிந்துர வல்லி சிங்கார! சிவசுத!
சுசீ கர! சிந்துர, கந்தர வாகன் சிறைவிடும்
சுசீகர! சிந்து உர மால் வினைக் குன்றைச், சிகண்டி கொண்டே. 66

சிகண்டிதத் தத்த மரவாரி விட்டத் திதிபுத்ரரா
சிகண்டிதத் தத்த நகபூ தரதெய்வ வள்ளிக்கொடிச்
சிகண்டிதத் தத்த மலர்மேற் குவித்திடை செப்புருவஞ்
சிகண்டிதத் தத்த கறபோ பலமென்னுஞ் சேகரனே.

சிகண்டி தத்தத் தமர வாரி விட்டு அ திதி புத்ர
ராசி கண்டித!(த்) தத்த நகபூதர! தெய்வ வள்ளிக்
கொடிச்சி கண்டு இதத்து அத்தமலர் மேற்குவித்து இடை செப்பு உரு
வஞ்சி, கண் திதத் தத்து அகல் தபோபலம் என்னும் சேகரனே. 67

சேகர வாரண வேல்வீர வேடச் சிறுமிபத
சேகர வாரண மேவும் புயாசல தீவினையின்
சேகர வாரண வெற்பாள நாளுந் த்ரியம்பகனார்
சேகர வாரண நின்கையில் வாரணஞ் சீவனொன்றே.

சே கரவா, ரண வேல்வீர! வேடச்சிறுமி பத
சேகர! வாரணம் மேவும் புயாசல! தீவினையின்
சேகு அர! ஆரண வெற்பாள! நாளும் த்ரியம்பகனார்
சே கர வாரணம், நின் கையில் வாரணம் சீவன் ஒன்றே. 68

சீவன சத்துரு கன்பாற் பிறப்பறத் தேவருய்யச்
சீவன சத்துரு மிக்குமெய் யோன்கையிற் சேர்த்தசெவ்வேள்
சீவன சத்துருச் செய்யாண் மருகவெ னாதிடையே
சீவன சத்துரு வெய்தியெய் தாப்பழி சிந்திப்பதே.

சீவன் அசத்து உருகு அன்பால், பிறப்பு அறத், தேவர் உய்யச்,
சீவன் அச(ஜ)த்து உருமிக்கும் மெய்யோன் கையில் சேர்த்த செவ்வேள்!
சீ வனசத்து உருச்செய்யாள் மருக! எனாது, இடையே
சீவன் அசத்து உரு எய்தி எய்தாப்பழி சிந்திப்பதே. 69

சிந்துர வித்தக வாரும் புகர்முகத் தெய்வவெள்ளைச்
சிந்துர வித்தக வல்லிசிங் காரசெந் தூரகுன்றஞ்
சிந்துர வித்தக முத்திக்கு மாய்நின்ற செல்வதுஞ்சா
சிந்துர வித்தக னம்போலு மிங்கிளந் திங்களுமே.

சிந்துர இத்தகவு ஆரும் புகர் முக தெய்வ வெள்ளைச்
சிந்துர வித்தக வல்லி சிங்கார!, செந்தூர!, குன்றம்
சிந்து உர!, வித்தக,! முத்திக்கும் ஆய் நின்ற செல்வ!, துஞ்சா
சிந்து, ரவித் தகனம் போலும் இங்கு, இளம் திங்களுமே. 70

திங்களு மாசுண மும்புனை வார்செல்வ னென்னையிரு
திங்களு மாசுண மாக்கும் பதாம்புயன் செந்திலன்னாள்
திங்களு மாசுண மன்போல் விழியுஞ் செழுங்கரும்புந்
திங்களு மாசுண நன்றான மாற்றமுந் தீட்டினன்றே.

திங்களும் மாசுணமும் புனைவார் செல்வன் என் ஐ இரு
திங்களும் மா சுணமாக்கும் பதாம்புயன், செந்தில் அன்னாள்
திங்கு அளும் மாசு உள் நமன்போல் விழியும் செழும் கரும்பும்
திம் களும் மாசுண நன்றான மாற்றமும் தீட்டின் நன்றே. 71

தீட்டப் படாவினி யுன்னாலென் சென்னி கறைப்பிறப்பில்
தீட்டப் படாவி யவரல்லன் யான்றிக்கு நான்மருப்புத்
தீட்டப் படாவி தமுகா சலன்சிறை விட்டவன்றாள்
தீட்டப் படாவி வனையே நினைவன் றிசாமுகனே.

தீட்டப் படா இனி உன்னால், என் சென்னி கறை பிறப்பில்
தீட்டப் படு ஆவியவர் அல்லன் யான்; திக்கு நான் மருப்புத்
தீட்டு அ படா வித முக அசலன் சிறை விட்டவன் தாள்
தீட்ட, படா இவனையே நினைவன்; திசாமுகனே !. 72

திசாமுக வேதனை யன்பாற் கரன்றிங் கடங்களவ
திசாமுக வேதனை யீறிலு மீறிலர் சீறுமம்போ
திசாமுக வேதனை வென்கண்ட வேலன் றினைப்புனத்தந்
திசாமுக வேதனை நண்ணுதண் கார்வரை சேர்பவரே.

திசாமுக வேதன், ஐயன் பாற்கரன் திங்கள், தங்கள்
அவதி சாம் உக வேதனை ஈறிலும் ஈறிலர்;. சீறும்
அம்போதி சாமுக வேதனை வென் கண்ட வேலன், தினைப்புனத்
தந்தி சாமுக வே(ய்) தனை நண்ணு, தண் கார் வரை சேர்பவரே. 73

சேரப் பொருப்பட வித்தே னிறைவன் றிரைசிறையைச்
சேரப் பொருப்பட வல்லவன் சூரைச் சிகரியுடன்
சேரப் பொருப்பட வென்றண்ட ரேத்திய சேவகன்வான்
சேரப் பொருப்பட வேணியிற் சேர்த்தவன் செய்தவமே.

சேரப் பொருப்பு அடவித் தேன் இறைவன்! திரைச் சிறையை
சேர் அப்பு ஓர் உப்பு அட வல்லவன்! சூரைச் சிகரியுடன்
சேரப் பொரு(ப்) பட வென்று அண்டர் ஏத்திய சேவகன்!
வான் சேர் அப்பு ஒருப்பட வேணியில் சேர்த்தவன் செய்தவமே!. 74

செய்தவத் தாலஞ்சு சீரெழுத் தோதிலத் தீதலருஞ்
செய்தவத் தாலஞ்சு கம்பெறச் சேயுரைக் கேற்றுருப்போய்ச்
செய்தவத் தாலஞ்சு வைக்கனி யீன்றதென் னேம்வினையே
செய்தவத் தாலஞ்சு கின்றன மும்மலச் செம்மல்கொண்டே.

செய்தவத்தால் அஞ்சு சீரெழுத்து ஓதிலம்,. தீது அலரும்;
செய் தவத் தாலம் சுகம் பெறச் சேய் உரைக்கு ஏற்று உருப்போய்
செய்த, அத்தாலம் சுவைக்கனி ஈன்றது என்னேம்?. வினையே
செய்து, அவத்தால் அஞ்சுகின்றனம், மும்மலச் செம்மல் கொண்டே. 75

செம்மலை வண்டு கடரங்க மாவென்ற திண்படைவேற்
செம்மலை வண்டு வசவார ணத்தனைச் செப்பவுன்னிச்
செம்மலை வண்டு தவந்தமிழ்ப் பாணதெண் டீங்கையில்வாய்
செம்மலை வண்டு விருப்புறு மோவிது தேர்ந்துரையே.

செம் மலை வண்டு உகள் தரங்கம் மா வென்ற திண் படை வேல்
செம்மலை வண் துவச வாரணத்தனைச் செப்ப உன்னி
செம்மலை வண்டு தவு அம் தமிழ்ப் பாண தெள் தீம் கையில் வாய்
செம்மலை வண்டு விருப்புறுமோ? இது தேர்ந்து உரையே. 76

தேரை விடப்பணி யேறேறி முப்புரஞ் செற்றபிரான்
தேரை விடப்பணி சூராரி யென்க தெரிவையர்பால்
தேரை விடப்பணி வாய்ப்படு மாறு செறிந்தலகைத்
தேரை விடப்பணித் தென்றோடி யென்றுந் திரிபவரே.

தேரை விடப்பணி, ஏறு ஏறி, முப்புரம் செற்ற பிரான்
தேர் ஐ,! விள் தப்பு அணி சூராரி! என்க, தெரிவையர் பால்
தேரை விடப்பணி வாய்படுமாறு செறிந்து, அலகைத்
தேரை, விடு அப்பு அணித்தென்று ஓடி என்றும் திரிபவரே. 77

திரிபுரத் தப்புப் புவிதரத் தோன்றி சிலைபிடிப்பத்
திரிபுரத் தப்புத் தலைப்பட நாண்டொடுஞ் சேவகன்கோத்
திரிபுரத் தப்புத் திரமான் மருக திருக்கையம்போ
திரிபுரத் தப்புத் துறையா யுதவெனச் செப்புநெஞ்சே.

திரி புரத்து அப்புப் புவி தரத் தோன்றிச், சிலை பிடிப்ப,
திரிபுரத்து அப்புத்தலைப்பட, நாண் தொடும் சேவகன்;
கோத்திரி புரத்து அப்புத்திர!, மால்மருக!, திருக்கை,
அம்போதி ரிபு ரத்தப்புத்துறை ஆயுத,,! எனச் செப்பு நெஞ்சே. 78

செப்பா ரமுதலை மன்னோ திகனங் குரும்பைமுலை
செப்பா ரமுதலை கண்கா னகைமுருந் தீரிருகண்
செப்பா ரமுதலை வாவியிற் சென்ற பிரான்மருகன்
செப்பா ரமுதலை வேர்களை வான்வரைச் சீரினுக்கே.

செப்பு ஆரமுது, அல் ஐ மன் ஓதி கனம், குரும்பை முலை
செப்பு, ஆர முது அலை கண், கால் நகை முருந்து, ஈரிருகண்
செ பாரமுதலை வாவியில் சென்ற பிரான் மருகன்!
செப்பார முதலை வேர் களைவான் வரைச் சீரினுக்கே. 79

சீராம ராம சிவசங்க ராநுந் திருமுடிக்குச்
சீராம ராம துகரத் துழாயென்பர் தெண்டிரைமேற்
சீராம ராம நிறந்திறக் கத்தொட்ட சேய்கழற்குச்
சீராம ராம னிமையோர் மகுடச் சிகாவிம்பமே.

சீ ராம ராம, சிவசங்கரா!, நும் திருமுடிக்குச்
சீர் ஆம் அரா மதுகரத் துழாய் என்பர், தெள் திரை மேல்
சீரா மராம நிறம் திறக்கத் தொட்ட சேய் கழற்கு,
சீராம், அரா மன் இமையோர் மகுட சிகாவிம்பமே. 80

சிகாவல வன்பரி தப்பாடு செய்யுஞ்செவ் வேலவிலஞ்
சிகாவல வன்பரி வூரார் மதனித் திலஞ்சலரா
சிகாவல வன்பரி யங்கங் குழல்பெற்ற தேமொழிவஞ்
சிகாவல வன்பரி யானல மன்றிலுந் தென்றலுமே.

சிகாவல,! அன்பர் இதப்பாடு செய்யும் செவ்வேல!,
இலஞ்சிகாவல!வன்பரி ஊரார், மதன், நித்திலம்
சலராசி, கா, அலவன், பரியங்கம், குழல், பெற்ற தேமொழி
வஞ்சி காவு அல; வன்பரியானலம் அன்றிலும் தென்றலுமே. 81

தென்றலை யம்பு புனைவார் குமார திமிரமுந்நீர்த்
தென்றலை யம்பு மின்கோ மருக செழுமறைதேர்
தென்றலை யம்பு சகபூ தரவெரி சிந்திமன்றல்
தென்றலை யம்பு படுநெறி போயுயிர் தீர்க்கின்றதே.

தென் தலை அம்பு புனைவார் குமார! திமிர முந்நீர்
தென் தலை அம்புயம் மின் கோ மருக,! செழுமறைத் தேர்
தென்றலை அம் புசகபூதர,! எரிசிந்தி மன்றல்
தென்றல் ஐ அம்பு படு நெறி போய் உயிர் தீர்க்கின்றதே. 82

தீரா கமல சலிகித போக மெனத் தெளிந்துந்
தீரா கமல மெனக்கரு தாததென் சேயவநூல்
தீரா கமல குகரம் பொறுப்ப னெனத்திருக்கண்
தீரா கமல மரவே கருகச் சிவந்தவனே.

தீரா கமல ச லிகித போகம் எனத் தெளிந்தும்;
தீ ராகம் அலமெனக் கருதாதது என்? சேய்! அவம் நூல்
தீர் ஆகம! லகு கரம் பொறுப்பன் எனத் திருக்கண்
தீ ராகம் அலமரவே கருகச் சிவந்தவனே. 83

சிவசிவ சங்கர வேலா யுததினை வஞ்சிகுறிஞ்
சிவசிவ சங்கர வாமயில் வீர செகந்திருக்கண்
சிவசிவ சங்கர மாவை யெனுந்திற லோய்பொறைவா
சிவசிவ சங்கர மான்பட்ட வாவொளி சேர்ந்தபின்னே.

சிவ சிவ சம் கரவேலாயுத! தினைவஞ்சி குறிஞ்சி
வசி வசம் கரவா மயில் வீர!, செகம் திருக்கண்
சிவ சிவ சங்கரமாவை எனும் திறலோய்,பொறைவாசி
வசிவசம் கர மான்பட்ட, ஆ ஒளி சேர்ந்த பின்னே. 84

சேந்த மராத்துடர் தானவர் சேனையைத் தெண்டிரைக்கண்
சேந்த மராத்துடன் கொன்றசெவ் வேல திருமுடிமேற்
சேந்த மராத்துட ரச்சூடி மைந்த திளைத்திளைத்தேன்
சேந்த மராத்துட ரின்னாரி யென்னுமிச் சேறுபுக்கே.

சேந்த! மராத்துடர் தானவர் சேனையைத், தெள் திரைக் கண்
சேந்து அ மராத்துடன் கொன்ற செவ்வேல!, திருமுடிமேல்
சே இந்து,அம், அரா, துள்தர சூடி மைந்த, திளைத்து இளைத்தேன்
சே; தமராத் துடர் இல், நாரி என்னும் இச்சேறு புக்கே. 85

சேறலைத் தாறலைக் கப்பா லெழுந்து செழுங்கமுகிற்
சேறலைத் தாறலைக் குஞ்செந்தி லாய்சிந்தை தீநெறியிற்
சேறலைத் தாறலைத் தீர்க்குங் குமார திரியவினைச்
சேறலைத் தாறலைக் கத்தகு மோமெய்த் திறங்கண்டுமே.

சேறு அலைத்து ஆறு அலைக்கு அப்பால்எழுந்து செழுங்கமுகில்
சேல் தலைத் தாறு அலைக்கும் செந்திலாய்! சிந்தை தீ நெறியில்
சேறலை தாறு அலைத் தீர்க்கும் குமார! திரிய வினை
சேறு அலைத்து ஆறலைக்கத் தகுமோ? மெய்த்திறம் கண்டுமே. 86

திறம்பா டுவர்தண் புனத்தெய்வ மேயென்பர் சேதத்துமாந்
திறம்பா டுவர்முது நீரெனக் காய்பவர் செந்தினைமேல்
திறம்பா டுவரிதழ் கண்டுரு காநிற்பர் செப்புறச்செந்
திறம்பா டுவரி லிவர்வல் லவர்நஞ் செயல்கொள்ளவே.

திறம் பாடுவர் தண் புனத் தெய்வமே என்பர், சேதத்து
மாந்திறம் பாடு உவர் முது நீர் எனக் காய்பவர், செம் தினை மேல்
திறம்பாள் துவர் இதழ் கண்டு உருகா நிற்பர். செப்புறச்
செந்தில் தம்பாடு வரில், இவர் வல்லவர் நம் செயல் கொள்ளவே. 87

செயலங்கை வாளை யிறைகோயி லைச்சிவ னாரமுதைச்
செயலங்கை வாளை முனிகொண்டல் வாளியைத் தேவர்பிரான்
செயலங்கை வாளை முனைவேலை யன்னவிச் சேயுறையுஞ்
செயலங்கை வாளை யுகள்செந்தில் வாழ்பவள் சேல்விழியே.

செயல் அம் கை வாள் ஐ இறை கோயிலை, சிவனார் அமுதை,
செய லங்கை வாளை முனி கொண்டல் வாளியை, தேவர்பிரான்
செயல் அங்கை வாளை, முனை வேலை, அன்ன இச்சேய் உறையும்
செய் அலம், கை வாளை உகள் செந்தில், வாழ்பவள் சேல் விழியே. 88

சேலையி லாருந் தவன்சூல மேறச் சினத்தவன்கண்
சேலையி லாருந் திவனோற் பவையர சிந்திரியச்
சேலையி லாரும் பராபரி புக்குறச் சிக்கெனுமிச்
சேலையி லாருந் திறையிட் டனர்தங்கள் சித்தங்களே.

சேலை இல் ஆர் உந்து அ வன் சூலம் ஏறச் சினத்தவன், கண்
சேல் ஐயில் ஆர் உந்தி வனோற்பவை அரசு, இந்திரியச்
சேலை இலார் உம்பர் ஆப ரிபு குறச் சிக்கெனும்
இச் சேலையில் ஆரும் திறை இட்டனர், தங்கள் சித்தங்களே. 89

சித்தத் தரங்கத்தர் சித்தியெய் தத்திரி கின்றதென்னர்ச்
சித்தத் தரங்கத்தர் சந்ததி யேசெந்தி லாய்சலரா
சித்தத் தரங்கத்த ரக்கரைச் செற்றகந் தாதிங்களிஞ்
சித்தத் தரங்கத்தர் சேயா ரணத்தந் திகிரியையே.

சித்தத் தரங்கத்தர் சித்தி எய்தத் திரிகின்றது என்?
அர்ச்சித்து அத்தர் அங்கத்தர் சந்ததியே,! செந்திலாய்,!
சலராசி தத்தரம் கத்து அரக்கரைச் செற்ற கந்தா!, திங்கள்
இஞ்சி தத்து அரங்கத்தர் சேய் ஆரண தந்தி கிரி ஐ ஏ. 90

திகிரி வலம்புரி மாற்கரி யார்க்குப தேசஞ்சொன்ன
திகிரி வலம்புரி செய்யா ரிலஞ்சிசெந் தூர்கனதந்
திகிரி வலம்புரி வேறும் படைத்தருள் சேய்தணியில்
திகிரி வலம்புரி சூடிய வாநன்று சேடியின்றே.

திகிரி வலம் புரி மாற்கு அரியார்க்கு உபதேசம் சொன்ன
திகிரி வலம்புரி செய் ஆர் இலஞ்சி செந்தூர் கனத்
தந்திகிரி வலம் புரிவேறும் படைத்தருள் சேய்! தணியில்
திகிரி வலம்புரி சூடியவா! நன்று சேடி இன்றே. 91

சேடி வணங்கு வளைத்தோளெனப் புணர் சேயவட
சேடி வணங்கு திருத்தணி காவல நின்செருக்காற்
சேடி வணங்கு கொடியிடை யாரையென் செப்புமுலைச்
சேடி வணங்கு தலைக்களி றீந்தது செல்லநில்லே.

சேடு இ அணங்கு வளைத் தோள் எனப் புணர் சேய,
வடசேடி வணங்கு திருத்தணி காவல!, நின் செருக்கால்
சேடி வணங்கு கொடி இடையாரை என் செப்பு?
முலைச்சேடு இ(வ்)வணம் குதலை களிறு ஈந்தது செல்ல நில்லே. 92

செல்லலை யம்பொழில் சூழ்செந்தி லானறி யானிறைகைச்
செல்லலை யம்பொழி லெங்கணு மேற்ப வெனத்தெறித்த
செல்லலை யம்பொழி லங்கைக் கருடிரு மானிறம்போற்
செல்லலை யம்பொழி லாகவ மாதுயிர் சேதிப்பதே.

செல் அலை அம் பொழில் சூழ் செந்திலான் அறியான், இறை கை
செல்லல் ஐயம் பொழில் எங்கணும் ஏற்ப, எனத் தெறித்த
செல்லல் ஐயம் பொழில் லங்கைக்கு அருள் திருமால் நிறம் போல்
செல் அல் ஐயம்பு ஒழி லாகவம் மாது உயிர் சேதிப்பதே. 93

சேதிக் கனைத்து களதாக்கு நோக்கினன் செல்வசெந்திற்
சேதிக் கனைத்து நிலைபெறச் சூரங்கஞ் சீரங்கமால்
சேதிக் கனைத்து வரிதோ யயில்கொடெற் சேர்க்கவந்தாற்
சேதிக் கனைத்து வருமா மறலி திறலினையே.

சேது இக்கனைத் துகள் அது ஆக்கும் நோக்கினன் செல்வ,!
செந்தில்சே! திக்கு அனைத்தும் நிலை பெறச் சூர் அங்கம் சீரங்கம் மால்
சே திக்க நைத்து உவரி தோய் அயில் கொடு எற் சேர்க்க வந்தால்
சேதிக், கனைத்து வரு மா மறலி திறலினையே. 94

திறவா வனக புரிவாச னீக்கச் சிகரிநெஞ்சந்
திறவா வனச முனியைவென் றோய்தென் றிசைத்திருச்செந்
திறவா வனமயி லோயந்த காலமென் சிந்தைவைக்கத்
திறவா வனநின் றிருவான தண்டைத் திருவடியே.

திறவு ஆ, அனக புரி வாசல் நீக்கச் சிகரி நெஞ்சம்
திறவு ஆ வனச முனியை வென்றோய்!, தென்திசை
திருச்செந்தில் தவா வன மயிலோய்,! அந்த காலம் என் சிந்தை வைக்க
திறவா வன நின் திருவானத் தண்டை திருவடியே. 95

திருக்கையம் போதிக ளோகஞ்ச மோநஞ்ச மோதிருமால்
திருக்கையம் போசெய்ய வேலோ விலோசனந் தென்னனங்கத்
திருக்கையம் போருகக் கைந்நீற்றின் மாற்றித்தென் னூல்சிவபத்
திருக்கையம் போக வுரைத்தோன் சிலம்பிற் சிறுமிதற்கே.

திருக்கை அம்போதிகளோ, கஞ்சமோ, நஞ்சமோ, திருமால்
திருக்கை அம்போ, செய்ய வேலோ, விலோசனம்? தென்னன்
அங்கத் திருக்கை அம்போருகம் கைந்நீற்றின், மாற்றித், தென்னூல்
சிவபத்தி ருக்கு ஐயம் போக உரைத்தோன் சிலம்பில், சிறுமிதற்கே. 96

சிறுமிக் குமர நிகர்வீர் பகிரச் சிதையுயிர்த்துச்
சிறுமிக் குமர சரணமென் னீருய்விர் செந்தினைமேற்
சிறுமிக் குமர புரைத்துநின் றோன்சிலை வேட்டுவனெச்
சிறுமிக் குமர வணிமுடி யான்மகன் சீறடிக்கே.

சிறு உமிக்கும் மர நிகர்வீர் பகிரச்சிதை உயிர் துச்சில்
துமிக் குமர சரணம் என்னீர்; உய்வீர், செம் தினை மேல்
சிறுமிக்கு மரபு உரைத்து நின்றோன் சிலை வேட்டுவன்
எச்சில் து மிக்கும் அரவு அணி முடியான் மகன் சீறடிக்கே. 97

சீரங்க ராக மறமோது திகிரி செங்கைகொண்ட
சீரங்க ராக மருகந்த தேசிக செந்தினைமேற்
சீரங்க ராக தனகிரி தோய்கந்த செந்தமிழ்நூற்
சீரங்க ராக விநோதவென் பார்க்கில்லை தீவினையே.

சீரம் கரா கம் அற மோது திகிரி ,செம் கை கொண்ட
சீரங்கர் ஆகமர் உகந்த தேசிக, செம் தினை மேல்
சீர் அங்கராக தன கிரி தோய் கந்த, செந்தமிழ்நூல்
சீரங்க, ராக விநோத, என்பார்க்கு இல்லை தீவினையே. 98

தீவினை யற்ற சினந்தீ ரகத்துண்மெய்த் தீபநந்தந்
தீவினை யற்ற வநந்தா தெடுத்தனஞ் செந்தினைமேல்
தீவினை யற்ற புனமான் கொழுநன் செழுங்கனகத்
தீவினை யற்ற வடியார்க் கருள்பெறுஞ் செல்வனுக்கே.

தீ வினையற்ற சினந்தீர் அகத்துள் மெய் தீபம்
நம்தம் தீவினை அல் தவ நந்தாது எடுத்தனம் செம் தினை மேல்
தீ வினையற்ற புன மான் கொழுநன் செழும் கனகத்
தீவினை அற்ற அடியார்க்கு அருள் பெறும் செல்வனுக்கே. 99

செல்வந் திகழு மலநெஞ்ச மேயவன் றெய்வமின்னூர்
செல்வந் திகழு நமதின்மை தீர்க்கும்வெங் கூற்றுவற்குச்
செல்வந் திகழுந் திருக்கையில் வேறினை காத்த செல்வி
செல்வந் திகழு மணவாள னல்குந் திருவடியே.

செல் வந்தி கழுமலம் நெஞ்சமே,! அவன் தெய்வ மின் ஊர்
செல் வந்து இகழும் நமது இன்மை தீர்க்கும், வெம் கூற்றுவற்கு
செல் வந்தி கழும் திருக் கையில் வேல், தினை காத்த செல்வி
செல்வம் திகழும் மணவாளன் நல்கும் திருவடியே.!!!!, ... 100



வெற்றிவேல் முருகனுக்கு ஹரஹரோஹரா
செந்திலாண்டவனுக்கு ஹரஹரோஹரா

செந்திலாண்டவன் அடிமை
S. உமாமகேஸ்வரி